**தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(27.07.2016 முதல் 31.07.2016)**

**அறிக்கைஎண் :060/2016** **தேதி: 26.07.2016**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 28°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை: கோயமுத்தூர் (27.07.2016 முதல் 31.07.2016)**

வரும் ஐந்து நாட்களுக்கும் வானம் மேமூட்டத்துடனும் மிதமானது முதல் கன மழையும் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 82 முதல் 86 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 66 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 27.07.2016 | 65 | 32 | 23 | 78 | 86 | 66 | 14 | தெற்கு |
| 28.07.2016 | 8 | 32 | 23 | 8 | 86 | 66 | 14 | தெற்கு |
| 29.07.2016 | 16 | 32 | 23 | 8 | 86 | 66 | 14 | தெற்கு |
| 30.07.2016 | 18 | 32 | 24 | 8 | 82 | 66 | 14 | தெற்கு |
| 31.07.2016 | 16 | 32 | 24 | 8 | 82 | 66 | 14 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி கொடி பூசணி வகைகளை போதுமான வடிகால் வசதி செய்து விதைக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையின் காரணமாக மஞ்சள் கிழங்கு அழுகலை தவிர்க்க போதிய வடிகால் வசதியை ஏற்படுத்தவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையின் காரணமாக கால்நடைகளின் குடில்களை சுற்றிலும் நீர் தேங்குவதை தவிர்ப்பதன் மூலம் கொசு உற்பத்தியை தவிர்க்கலாம்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழை மற்றும் மேமூட்டம் காரணமாக நெல்லுக்கு மண்வழியாக மேலுரம் இடுவதை தவிர்க்கவும்.

- ✓ ஐந்து மாதங்கள் மற்றும் அதற்கு மேலுள்ள வாழை மரங்கள் அதிக காற்று மற்றும் மழையினால் பாதிக்கப்படாமல் இருக்க முட்டு கொடுக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ எதிர்பார்க்கப்படும் மழையின் காரணமாக மஞ்சள் கிழங்கு அழுகலை தவிர்க்க போதிய வடிகால் வசதியை ஏற்படுத்தவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**